# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.
## C.C. No.254/2025 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முத்துக்கிருஷ்ணன் | க–பெ/ த–பெ | சிவக்குமார் |
| ஊர்: | : | கோட்டையூர் | சமயம் | |
| வயது: | : | 26/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சிவில் இன்சினியர் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026**

-----------------------------------------------------------------------------------------------

<u>10.08.2026</u>

<u>குறுக்கு விசாரணை</u>

1) எந்த தேதியில் எதிரிக்கு பணம் கொடுத்தேன் என்றால் 09.07.2025 ல் பணம் கொடுத்தேன். எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் ரூ. 1,50,000/– கொடுத்தேன். எவ்வளவு வட்டி என்றால் மாதம் 1 சதவீதம் வட்டியாகும். நான் வட்டி தொழில் செய்கிறேனா என்றால் இல்லை, எதிரி எனது உறவினர் ஆவார். பணம் கொடுத்த தேதியில் எதிரியிடம் இருந்து கடனுறுதி ஆவணம் எழுதிபெறவில்லை என்றால் சரிதான். எதிரி வட்டி தொகை எங்கு வைத்து கொடுத்தார் என்றால் ரூ.3,000/– எதிரியின் வீட்டில் வைத்துக்கொடுத்தார். வட்டி பணம் கொடுத்ததற்கு நான் ரசீது கொடுத்தேனா என்றால் இல்லை. எனது கட்டுமான தொழிலுக்காக எதிரியின் கடையில் இருந்து மரம் வாங்குவேன் என்றால் இல்லை. எதிரி எனது வங்கிக்கு தொகை செலுத்தியுள்ளாரா என்றால் தற்போதைய கடனுக்கு முன்பு ரூ.2,000/– ரூ.3,000/– என அனுப்பியுள்ளார். எதற்காக பணம் அனுப்பியுள்ளார் என்றால் எதிரி எனது உறவினர், நானும் எதிரியும் Common பண்டிகைக்கு குழுவில் உள்ளோம் அதற்காக வரவு செலவு

பொருட்கள் வாங்குவதற்காக எனக்கு பணம் அனுப்பியுள்ளார்.

2) நான் எந்த வங்கியில் கணக்கு வைத்துள்ளேன் என்றால் IOB,SBI, AXIS, நிறுவனத்தின் பெயரில் TMB ஆகிய வங்கி கணக்கு உள்ளது. எத்தனை மாதம் வட்டி செலுத்தியுள்ளார் என்றால் 1மாதம். எந்த தேதியில் வட்டி கொடுத்தார் என்றால் 18.07.2025. 1 மாதம் வட்டி ரூ1,500/- இருக்கும்பட்சத்தில் எதற்காக ரூ.3,000/- வட்டி செலுத்தினார் என்றால் வட்டி மாதம் ரூ3,000/- என பேசப்பட்டது, 2 மாதத்தில் பணத்தை திருப்பி தருவதாக கூறினார். மோகன் எத்தனை முறை எனக்கு பணம் அனுப்பினார் என்பதை எனது வங்கி கணக்கை பார்த்தால் தெரியும் என்றால் சரிதான், நான் பணம் எதிரிக்கு கொடுத்ததிலிருந்து எந்த தொகையும் எதிரி கொடுக்கவில்லை. ரூ.1,50,000/- நான் வங்கியில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை, ரொக்கமாக கொடுத்தேன். எவ்வாறு அந்த தொகை பெற்றிருந்தேன் என்றால் Construction தொழிலுக்கான பெற்ற லாபத்தொகையாகும். எந்த ஆண்டு முதல் Construction செய்து வருகிறேன் என்றால் 2023 முதல். அதற்காக நிறுவனம் வைத்துள்ளேனா என்றால் 2023 முதல் வைத்துள்ளேன்.

3) " இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கோட்டையூர் கிளை காசோலை எண் 472618 ல் ரூ.1,50,000/-ற்திற்கு பூர்த்தி செய்து அவற்றை பணமாக்கி கொள்ளலாம் என சொல்லியுள்ளார் " என்று எனது புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் கொடுத்த தொகைக்காக எதிரி எனக்கு நிரப்பாத காசோலை கொடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி அனைத்து விரபமும் நிரப்பி தான் கொடுத்துள்ளார். எதிரி கையெழுத்தை ஒப்பிடுவதற்கு நிபுனருக்கு அனுப்ப ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. எதிரி என்னிடம் 2021ல் ரூ. 50,000/- மட்டுமே கடனாக பெற்றார் என்றாலும், அதை 2022ல் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும், சரியல்ல, 2021ல் ரூ.90,000/- கடனாக பெற்றார் அதில் ரூ. 50,000/- மட்டுமே திருப்பி செலுத்தியுள்ளார். ரூ.50,000/- வங்கி மூலமாக செலுத்தினாரா

என்றால் தற்போது நினைவில்லை. 2021ல் எதிரி பெற்ற கடனிற்காகத்தான் வழக்கு காசோலையை கொடுத்தார்என்றாலும், அந்த கடனை எதிரி 2021ல் செலுத்திவிட்டு காசோலையை திருப்பி கேட்டபோது நான் தொலைத்துவிட்டேன் என்று கூறினேன் என்றாலும் சரியல்ல. எதிரி எனக்கு என்ன உறவுமுறை என்றால் சித்தப்பா உறவு முறை. நான் எதிரிக்கு உறவு முறை என்பதால் நான் காசோலையை தொலைத்துவிட்டதாக கூறியதற்கு எதிரி கண்டுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

4) வழக்கறிஞர் அறிவிப்பு எந்த தேதியில் அனுப்பினேன் என்றால் 2025ல் 10வது மாதம் அனுப்பினேன், தேதி குறிப்பாக நினைவில்லை. 2023ல் கட்டிட தொழிலுக்காக எதிரியிடம் இருந்து ரூ.1,00,000/- மரம் வாங்கினேன் என்றாலும், அதில் ரூ. 25,000/- மட்டுமே திருப்பி செலுத்திவிட்டு, ரூ. 75,000/- நிலுவை வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு எந்த பரிவர்த்தனையும் நடைபெறவில்லை. எதிரி நிலுவை தொகை ரூ. 75,000/-பல முறை என்னிடம் கேட்டுக்கொண்டதால் அதற்கு பழிவாங்க வேண்டும் என்பதற்காக காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, மரம் எதுவும் நான் வாங்கவில்லை. வழக்கு காசோலையை நான் தன்னிச்சையான நிரப்பி எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையில் தேதி மட்டும் 2 மாதம் கழித்த தேதி என்று நிரப்பியுள்ளேன், தொகை , பெயர், மற்ற விபரங்கள் எதிரிதான் நிரப்பினார். தற்போதைய காசோலை வ+ழக்கு சட்ட ரீதியாக செல்லாது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.08.10 19:07:08 -0400

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,காரைக்குடி.